
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1007

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

35

# ‘அவன் பித்தனா?’
## தொழிலாளர் உரிமை பேசிய புதுமைக் காவியம்!





படங்கள் உதவி: ஞானம்

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

தன் நலன், தன் சுகம் என்று சுயநலமாக வாழும் மனிதர்கள் மத்தியில் பிறரது வறுமை, பசி, துன்பம் போக்க உழைக்கும் நல் மனிதனைப் பார்த்து பிழைக்கத் தெரியாதவன், மனநலம் பிறழ்ந்தவன் என்று ஏளனம் செய்யும் மோசமான உலகம் இது. ஆம், ஏற்றத்தாழ்வான ஒரு சுரண்டல் சமூக அமைப்பில், ஏய்த்துப் பிழைப்பதைத் திறமையாகக் கருதும் மனிதர்களின் பார்வை இப்படித்தான் இருக்கும்.

அப்படிப்பட்ட இந்த சமூகத்தின் அநீதியான கண்ணோட்டத்தைச் சாடுவதற்காகவும் எள்ளி நகையாடித் திருத்துவதற்காகவும் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதி 1966–ஆம் ஆண்டு திரைக்கு வந்த அற்புத, சமூக, அரசியல் காவியம்தான் ‘அவன் பித்தனா?’.

தயாரிப்பு உமையாள் புரொடக்சன், இயக்கம் ப.நீலகண்டன். நடிகர்கள் எஸ்.எஸ்.ராஜேந்திரன்.எம்.எல்.ஏ., ஆர்.விஜய குமாரி, எஸ்.வி.சகஸ்ரநாமம், டி.பி.முத்துலெட்சுமி, டி.எஸ்.பாலையா, நாகேஷ், சச்சு, ஏ.கருணாநிதி, டி.வி.நாராயணசாமி ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர்.

### படத்தின் கதைச் சுருக்கம்

‘நல்லையா நெசவு ஆலை’யின் முதலாளி நல்லையா (எஸ்.வி.சகஸ்ரநாமம்) பெரிய பணக்காரர். அவரது ஒரே மகன் ராஜா தனது தந்தையின் எதிர்ப்பையும் மீறி தாழ்த்தப்பட்ட ஜாதி ஏழைப் பெண்ணைக் காதலித்துக் கலப்பு மணமும் செய்து கொள்கிறான். அதனால் நல்லையா கோபம் கொள்கிறார். ராஜா தனது தந்தையை விட்டுப் பிரிந்து வெளியூர் சென்று மனைவியுடன் வாழ்கிறான். ஒரு ஆண் குழந்தையும் பிறக்கிறது.


ஒரு நாள் ராஜா திடீரென இறந்துவிட, அநாதையாகும் அவனது மனைவி தனது குழந்தையுடன் ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்து, தனது மாமனாரின் மாளிகையைத் தேடி அலைந்து கண்டடைகிறாள். பசி பட்டினியால் வாடிப்போன அவள் நல்லையாவின் பங்களா வாயிலில் குழந்தையை ஆதரவாக விட்டு விட்டு மயங்கி விழுந்து இறந்து போகிறாள். கூடி நின்று வேடிக்கை பார்ப்பவர்களில் நல்ல மனிதரான அழகிரி என்பவர் குழந்தையைத் தூக்கி வந்து குமார் (எஸ்.எஸ்.ஆர்) எனப் பெயர் சூட்டி வளர்க்கிறார்.

இதற்கிடையே ஆலை முதலாளி நல்லையா மனம் மாறி, மகனைத் தேடிச் செல்கிறார். மகன் இறந்து போனதையும் மருமகள் குழந்தையுடன் ஊரை விட்டுப் போய் விட்டதையும் அறிந்து கண்ணீர் விடுகிறார். ஆனால், அவரது பேரன் குமார், அவரது மில்லுக்கு எதிரே உள்ள அழகிரி தேநீர்க் கடையில், தான் வளர்ந்து பெரியவனாகிறான்.

மேலும் மகன் இறந்து போனதுடன், தனது மருமகளையும் பேரனையும் பார்க்க முடியாத மனக்கவலையினால் நோயாளியாகி விட்ட நல்லையாவை உறவினர்கள் எவரும் சரியாகக் கவனிக்காமல், அவரது சொத்துகளை அபகரிக்கும் நோக்கிலேயே அவரைச் சூழ்ந்து வாழ்ந்து வருகின்றனர். அதனால் நல்லையாவின் குடும்ப மருத்துவர் (டி.வி.நாராயணசாமி) நல்லையாவைக் கவனித்துக் கொள்ள நர்ஸ் ஒருவரை அனுப்புவதாகச் சொல்கிறார்.

அழகிரி இறந்தவுடன் தேநீர்க்கடையை குமார் தொடர்ந்து நடத்தி, மில் தொழிலாளர்களின் பசி போக்குகிறான். நல்லையாவின் அக்காள் மகனும் மில் மேனேஜருமான கழுகாசலம் (டி.எஸ்.பாலையா) ஒழுங்காக சம்பளம், போனஸ் கொடுக்காமல் மில் தொழிலாளிகளின் வயிற்றில் அடிக்கிறான். அதனால் தொழிலாளிகள் குமார் கடையில் கடன் வைத்துச் சாப்பிடுகின்றனர்.

இந்நிலையில், சுயேட்சை அரசியல்வாதியான தனது தகப்பனாரின் (செந்தாமரை) தேர்தல் பைத்தியத்தால் பாதிக்கப்பட்டு, வீட்டை விட்டு வெளியேறி ஓடி வரும் கோமதி (ஆர்.விஜயகுமாரி) குமார் வீட்டில் தஞ்சமடைகிறாள். ஏற்கெனவே குமார் ஐந்து ஆதரவற்ற குழந்தைகளை வளர்த்து வருகிறான். அவர்களுடன் கோமதியும் தங்குகிறாள். வேலை தேடும் கோமதிக்கு நல்லையாவைப் பராமரிக்கும் நர்ஸ் வேலை கிடைக்கிறது. கோமதி நல்லையாவின் நன்மதிப்பைப் பெறுகிறாள். அதனால் நல்லையாவின் அக்காள் மகள் அபையம்மாவின் (டி.பி.முத்துலெட்சுமி) கோபத்திற்கு கோமதி ஆளாகிறாள்.



> **சமூகத்தின் அநீதியான கண்ணோட்டத்தைச் சாடுவதற்காகவும் எள்ளி நகையாடித் திருத்துவதற்காகவும் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய படம்!**

அபையம்மாவின் மகன் சின்னையாவை (நாகேஷ்) நல்லையாவின் சொத்துகளுக்கு வாரிசாக ஆக்கும் விதமாக தத்துப் பிள்ளையாக்க, அபையம்மா முயற்சி செய்கின்றார். இந்த நேரத்தில் கோமதி மூலம் குமார்தான் நல்லையாவின் பேரன் என்கிற உண்மை தெரிய வந்து குமார் நல்லையாவின் சொத்துகளுக்கு வாரிசாக ஆகிறான். அபையம்மாவும், கழுகாசலமும் கோபத்தில் கொதிக்கின்றனர்.

### சொத்துகளை அபகரிக்க நாடகம்

நல்லையா ஒரு விழா நடத்தி, குமார்தான் தனது வாரிசு என அறிவித்து விட்டு, இறந்து போகிறார். குமார் மில் தொழிலாளர்களை எல்லாம் மில்லின் பங்குதாரர் என்று அறிவித்து, லாபத்தில் அனைவருக்கும் பங்கு என அறிவிக்கிறான். மேலும், குமாரும் கோமதியும் திருமணம் செய்து கொண்டு சொத்துகளை அனுபவிக்க வேண்டும் என நல்லையா உயில் எழுதி வைத்திருப்பதை அறிந்து, அதனால் கோபம் கொள்ளும் கழுகாசலம் குமாரையும் கோமதியையும் பிரித்துத் தனது மகள் சரஸ்வதியை (சச்சு) குமாருக்குத் திருமணம் செய்து வைத்து, சொத்துகளை அபகரிக்கத் திட்டமிடுகிறார்.

நல்லையா எழுதிய உயிலை எடுத்துத் தனது மனைவியிடம் கொடுத்து தீயில் எரிக்கச் சொல்லிவிட்டு, போலியாக ஒரு உயிலைத் தயாரித்து அதில் குமார், கழுகாசலத்தின் மகள் சரஸ்வதியைத் திருமணம் செய்து கொண்டால்தான் சொத்துகளுக்கு வாரிசாக முடியும் என்று எழுதி வைத்துவிடுகிறார். ஆனால், கழுகாசலத்தின் மகள் சரஸ்வதியும் அபையம்மாவின் மகன் சின்னையாவும் காதலிக்கின்றனர்.

மேலும் கோமதி ஒரு தாசியின் மகள் என்று குமாரிடம் பொய் சொல்லி, நம்ப வைத்து அவர்களைப் பிரிக்க முயல்கிறார் கழுகாசலம். அது முடியாமல் போகிறது. குமாருக்கும் சரசுவுக்கும்தான் திருமணம் நடக்கப் போகிறது என்று நினைத்து வருந்தும் கோமதி தனது பெற்றோர் வீட்டுக்குத் திரும்புகிறாள். அவளுக்கு அவளது பெற்றோர் திருமண ஏற்பாடு செய்கின்றனர். அதைக் கேள்வியுறும் குமார் மனம் கொதித்துப் போய் தனது மாளிகையின் பணப் பெட்டியிலிருக்கும் பணத்தைப் பார்த்து இந்தப் பணம்தானே அனைத்திற்கும் காரணம் என வெளியே தூக்கி எறிகிறான்.

அதனைக் கண்டு குமாருக்கு மனநலம் பாதித்து விட்டது என்று சொல்லி கழுகாசலம் குமாரை மனநல மருத்துவமனையில் அடைத்து விடுகிறான். அங்கிருந்து தப்பி வரும் குமார் கழுகாசலத்தைச் சந்தித்து அவனைத் தாக்குகிறான். கழுகாசலம் போலீசுக்கு போன் செய்யும்போது குமார் கழுகாசலத்தின் துப்பாக்கியை பறித்துக் கொண்டு தப்பி ஓடுகிறான். அதனால் போலீஸ், மனநலக் காப்பகத்திலிருந்து பயங்கரமான ஒரு ஆள் தப்பிவிட்டதாக அறிவிக்கின்றனர். மக்கள் குமாரைக் கல்லால் அடித்து விரட்டி வருகின்றனர்.

குமார், கோமதியையும் குழந்தைகளையும் சந்திக்கிறான். மக்கள் கற்களை வீசி அவர்களைத் தாக்குகின்றனர். கல்லடிபட்டு குழந்தை செண்பகம் இறந்து போகிறாள். கோபம் கொள்ளும் குமார், துப்பாக்கியால் மக்களைச் சுட முற்படும் போது போலீசார் வந்து குமாரைக் கைது செய்து நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்துகின்றனர்.

குமாருக்கு மனநலம் பாதிக்கப்பட்டது என குமாரால் உதவி பெற்றவர்களே அவனின் இரக்க குணத்தை மனநலச் சிக்கல் என சாட்சி சொல்கின்றனர். குமார் மனம் நொந்து போகிறான். ஆனால், நீதிபதி குமாரின் நல் உள்ளத்தைப் புரிந்து கொண்டு குமாரை விடுதலை செய்கிறார்.

போலி உயில் தயாரித்து ஏமாற்றிய குற்றத்திற்காக, கழுகாசலம், அபையம்மா, தர்மராஜ் (ஏ.கருணாநிதி) ஆகியோர் கைது செய்யப்படுகின்றனர். குமாரும் கோமதியும் இணைவதுடன் படம் நிறைவடைகிறது.

...காட்சி விரியும்

## மதவாத அரசியலின் ருசி அறிந்தவர்கள்!

பீகார் மாநில தேர்தல் பிரச்சாரத்தில், தமிழ்நாடு குறித்து வழக்கம்போல பா.ஜ.க. அவதூறான வதந்தியைப் பேசி பரபரப்பைக் கூட்டி இருக்கிறார் பிரதமர் மோடி. அவரது பேச்சுக்கு முதலமைச்சர் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், வட மாநில இளைஞர் ஒருவர் தமிழ்நாடு குறித்து நேரில் அறிந்ததை, தனது அனுபவத்தில் இருந்து பகிர்ந்துள்ளார், எழுத்தாளர் க.விக்னேஸ்வரன். அவரது பதிவிலிருந்து...

“சென்ற மாதத்தில் விமானப் பயணம் ஒன்றில், வட இந்தியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவருடன் உரையாடும் வாய்ப்பு அமைந்தது. அவர் என்னிடம் நெகிழ்வான உரையாடலைத் தொடங்க விரும்பியதே, நான் தமிழர் என்று தெரிந்த பின்புதான். மருத்துவ மாணவரான அவர், கல்லூரியில் பயிலும் காலத்தில் தமிழ்நாட்டில் பயணம் செய்து முக்கியமான ஆன்மிகத் தலங்களை, தரிசனம் செய்ய வேண்டும் என்கிற ஆர்வம் கொண்டு, யாரிடமும் எதையும் சொல்லிக்கொள்ளாமல் தமிழ்நாட்டிற்குக் கிளம்பி வந்திருக்கிறார்.

இந்தி மொழி பேசாத மாநிலம் என்பதால், மக்கள் தன்னிடம் எப்படி நடந்துகொள்வார்கள் என்கிற இயல்பான அச்சம் இருந்தது. ஆனால், தமிழ்நாட்டில் இறங்கி உலாவிய முதல் நாளிலேயே தனது பயம் அனைத்தும் காணாமல் போய்விட்டதாகவும், தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் எப்படி தன்னிடம் அன்பாகவும் பண்பாகவும் நடந்துகொண்டார்கள் என்பதையெல்லாம் என்னிடம் மகிழ்ச்சியுடனும் உரையாடிக்கொண்டிருந்தார்.

இருபது நாட்களுக்கும் மேலாக தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான ஆலயங்கள் அனைத்தையும் சாலை வழிகளில் பயணம் செய்து தரிசித்துள்ளார். தமிழ்நாட்டைப் பற்றிய அச்சம் தன்னிடம் தற்போது துளியும் இல்லை என்றும், மீண்டும் வாய்ப்பு கிடைத்தால், தனது குடும்பத்தை அழைத்துக்கொண்டு வந்து தமிழ்நாட்டின் ஆலயங்களையும், தமிழ்நாட்டின் நிலப்பரப்பின் அழகியலைக் காட்டி அதன் உயர்வுகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்” என வடமாநில இளைஞருடனான அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார்.

“மதவாத அரசியலின் இரத்தச் சுவை ருசித்து வெற்றிகளைப் பெற்றவர்கள், தற்போது மாநிலங்களின் மெல்லிய வேறுபாடுகளின் அரசியலை ருசிக்கவும் அதை மக்களிடம் பழக்கவும் ஆரம்பித்துள்ளார்கள்” என்று அவரது பதிவு முடிகிறது.

## ஃப்ளாஷ்பேக்



‘உட்லேண்ட்ஸ்’ ரா.அப்பு



### தலைவரிடமிருந்து பெற்ற பரிசு!

2012 ஆம் ஆண்டு வாக்கில், சென்னை கிண்டியில் மாவட்ட இளைஞர் அணி மாநாடு நடைபெற்றது. அப்போது இளைஞர் அணியில் சேர்ந்திருந்தவர்களுக்கு இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கரங்களால் அன்புப் பரிசு வழங்கி பாராட்டினார். முதன்முதலின் தலைவர் கரங்களால் பெற்ற பரிசு மறக்க முடியாத நினைவு.

**– ‘உட்லேண்ட்ஸ்’ ரா.அப்பு,**
**மாணவரணி துணை அமைப்பாளர்,**
**மயிலை பகுதி–சென்னை தென் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கைதி எண்: 5779

1953-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் தேதி கல்லக்குடி போராட்டத்தில் கைது செய்யப்பட்ட கலைஞர் உள்ளிட்ட 5 பேருக்கு, ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இராம.சுப்பையா உள்ளிட்ட 31 பேருக்கு இரண்டு மாதம் கடுங்காவல், 35 ரூபாய் அபராதம். கட்டத் தவறினால், ஒருமாதம் சிறை தண்டனை என விதிக்கப் பட்டது. அனைவரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர். அங்கு கலைஞருக்குத் தரப்பட்ட கைதி எண் : 5779.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131